# முதன்மை மாவட்ட நீதிமன்றம், விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்

OS.No.2/2009

22.09.2021

**பி.வா.சா.1 – பெருமாள் என்பவர் ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பி.வா.சா.ஆ.6 ல் கடந்த 04.11.2007ம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரத்தினை நிறைவேற்றும் பொருட்டு தங்கள் கட்சிக்காரர் மீது ஏற்றுலை ஆற்றல் பரிகாரம் கோரி வழக்கு தொடுப்பதாக கூறி தான் அ.வ.எண்.85/2008 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. எனது கட்சிப்படி பி.வா.சா.ஆ.3 அக்ரிமெண்ட் படி எனக்கு கிடைத்த உரிமையின் அடிப்படையில்தான் அ.வ.எண்.85/2008 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் 3ல் ஒரு பங்கு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.3 அக்ரிமெண்டில் மொத்த தபசில் சொத்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 அக்ரிமெண்ட் படி மொத்த தபசில் சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ.3 ன்படி குறிப்பிட்டுள்ள தபசில் சொத்துக்கள் விவரங்கள் சரியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் வேண்டுமென்றே நான் தவறான சொத்து விவரங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 ல் தவறான சொத்து விவரங்களை குறிப்பிட்டுள்ளதால், எனக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தவறான சொத்து விவரங்கள் கூறி நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.85/2008 வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதியை மோசடி செய்ய வேண்டும்

என்ற கெட்ட எண்ணத்துடன் நானும், 1ம் பிரதிவாதியும் இந்த பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தை உற்பத்தி செய்து, பின்னர் 3ம் பிரதிவாதியிடம் அதிக கிரைய தொகையை பெற டிமாண்டு செய்து 1ம் பிரதிவாதி சொல்படி நடக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன், நானும் 1ம் பிரதிவாதியும் பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தை மோசடியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.3 அக்ரிமெண்டை எந்த காலத்திலும் 3ம் பிரதிவாதியிடம் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றாலும், அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும், அது 3ம் பிரதிவாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றாலும் தவறு. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தை 3ம் பிரதிவாதி மறுக்கிறார் என்றாலும், அதுபோக பல தேதிகளில் ரூ.4 லட்சம் செலுத்தப்பட்டதாக சொல்லப்படும் அந்த தொகைகள் செலுத்தப்படவில்லை என்றாலும், ஆனால் செலுத்தப்பட்டதாக மேற்குறிப்புகள் செய்யப்பட்டது என்றாலும், அவ்வாறு அந்த தொகைகள் நான் செலுத்துவதற்கு எனக்கு வசதி வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 அறிவிப்பு வந்தவுடன் 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியை சந்தித்து கேட்டதில் 1ம் பிரதிவாதி என்னிடம் பணம் பெற்றுக் கொண்டதும், கடன் தொகை பெற்றுக்கொண்டதும், என்னிடம் பெற்றுக் கொண்ட கடனுக்கு நான் பணம் கேட்டதற்கு, 1ம் பிரதிவாதி அவரால் உடனே செலுத்த இயலவில்லை என்று சொன்னதில், நான் கடன் கொடுத்ததற்கு ஆதாரம் கேட்டதால், 1ம் பிரதிவாதி வேறு வழியின்றி நான் கொண்டு வந்த எழுதப்படாத காகிதங்களில் கையெழுத்து போட்டார் என்றாலும், நான் சொல்வது போல் எந்தவிதமான அக்ரிமெண்ட் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி கூடிய விரைவில் நல்ல விதமாக என் கடனை திருப்பி செலுத்தவிடுவார் என்றும், அதனால் நான் அனுப்பிய பி.வா.சா.ஆ.4 அறிவிப்பிற்கு 3ம் பிரதிவாதி மறுப்பு பதில் அனுப்ப வேண்டியதில்லை என்றாலும், 1ம் பிரதிவாதி 3ம்

பிரதிவாதியிடம் கூறியதை 3ம் பிரதிவாதி நம்பி பி.வா.சா.ஆ.4 க்கு எந்த பதிலும் அனுப்பவில்லை என்றால் அது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. எனக்கும், 3ம் பிரதிவாதிக்கும் இடையே தனியான ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி எனக்கு எந்த விதத்திலும் கடமைப்பட்டவா் கிடையாது என்றால் சரிதான். என்னுடைய கட்சிப்படி 3ம் பிரதிவாதியின் மீது நான் வழக்கு தாக்கல் செய்ய உரிமையும், முகாந்திரமும் கிடையாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மற்றும் வாதிகளுடன் நான் கூட்டுச் சோ்ந்து பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை உற்பத்தி செய்து அ.வ.எண்.85/2008 வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 04.11.2007ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின்படி தபசில் சொத்தினை கிரையம் பெற்று விடக்கூடாது என்று 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தினை 3ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதியும் கூட்டுச் சோ்ந்து உற்பத்தி செய்துகொண்டனா் என்று நான் எனது முதல் விசாரணை ஆணையுரையில் வேண்டுமென்றே பொய்யாக கூறியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது முதல் விசாரணை ஆணையுரையில் 3ம் பிரதிவாதி கூறுவதுபோல், 3ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதியும் 14.04.2008ல் கிரைய பத்திரம் செய்து கொண்டிருந்தால், ஸ்ரீவில்லிபுத்தூா் சாா்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.86/2008 வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பி.வா.சா.ஆ.4 அறிவிப்பிற்கு 3ம் பிரதிவாதியால் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கும் என்றும், நான் அனுப்பிய பி.வா.சா.ஆ.4 அறிவிப்பு தேதியில் 1ம் வாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும், இடையே எந்தவிதமான ஒப்பந்தமும் ஏற்படாத காரணத்தினால்தான் 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தம் குறித்து எந்தவிதமான பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்று நான் வேண்டுமென்றே பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ஏற்கனவே 1ம் பிரதிவாதி கூறிய வாா்த்தைகளை நம்பித்தான் 3ம்

பிரதிவாதி பி.வா.சா.ஆ.4 அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்துக்களான 13 அயிட்டம் மற்றும் 12 வது அயிட்டம் கிணறு பம்ப் செட்டில் பாதி பங்கை சேர்த்து 08.10.2001ம் தேதிய ரிஜிஸ்டர் அடமான பத்திரம் மூலம் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் ரூ.2 லட்சத்திற்கு அடமானம் வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 31.05.2002ம் தேதிய அடமான பத்திரம் மூலம் பிராது 9 முதல் 11 லக்க சொத்துக்களையும், 12வது அயிட்ட கிணறு பம்ப் செட் பாதி பங்கையும் சேர்த்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் ரூ.2 லட்சத்திற்கு அடமானம் வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த இரண்டு அடமான கடன் தொகையான ரூ.4 லட்சத்திற்கு வட்டிக்கு ஈடாக 3ம் பிரதிவாதி அந்த அடமான பத்திரங்களில் கண்ட அனுபவித்து சாகுபடி செய்து வர என்று சொல்லி 31.05.2002ம் தேதியன்று அவருக்கு அடமான சொத்துக்களை சுவாதீனம் கொடுத்து 31.05.2002ம் தேதியில் ஒரு அக்ரிமெண்டும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் எழுதிக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 31.05.2002ம் தேதிய அக்ரிமெண்ட் படி அந்த தேதி முதல் இரண்டு அடமான பத்திரத்தில் கண்ட சொத்துக்களை வட்டிக்கு ஈடாக 3ம் பிரதிவாதிதான் அவருடைய அனுபவத்தில் வைத்து சாகுபடி செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிராதிற்கும், அ.வ.எண்.2-2009, அ.வ.எண்.172-2008 ஆகிய வழக்குகளில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரை பி.வா.சா.ஆ.4 அறிவிப்பு இதற்கெல்லாம் நான்தான் வழக்கறிஞருக்கு விவரம் சொன்னேன் என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. 1ம் பிரதிவாதி பிராது 1 முதல் 13 சொத்துகளை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுப்பதாக 2008 ஏப்ரல் மாதம் 2 வது வாரத்தில் சொன்னார் என்றாலும்,

அதனை 3ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டார் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியிடம் அவ்வாறு கிரையம் கொடுக்க கூறியதை 3ம் பிரதிவாதி சம்மதித்து ஏற்றுக்கொண்டு அந்த சொத்துக்களுக்கு கிரையத் தொகையாக ரூ.14 லட்சத்தினை 14.04.2008 அன்று முடிவு செய்து அன்றைய தேதிக்கு 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடம் ரூ.2 லட்சம் அட்வான்ஸ் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 14.04.2008ம் தேதி 1ம் பிரதிவாதியும், 3ம் பிரதிவாதியும் ஒரு கிரைய ஒப்பந்தம் பிறப்பித்துக் கொண்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனது மகன்களான இந்த வழக்கின் வாதிகள் இருவரையும் அவருடன் சேர்ந்து கிரைய பத்திரம் எழுதிக்கொடுக்கிறேன் என்றும், அசல் ஆவணங்களை ஒப்படைக்கிறேன் என்றும், ஒத்துக்கொண்டார் என்றாலும், அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி தானும், அருவடைய மகன்களும் அடங்கிய இந்து பொதுக்குடும்பத்திற்கு கர்த்தா மேனேஜராக இருந்துதான் இரண்டு அடமான பத்திரங்கள் 31.05.2002 ம் தேதிய ஒப்பந்த பத்திரம் மற்றும் 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்த பத்திரம் ஆகியவற்றை எழுதிக்கொடுத்தார் என்றாலும், அதுபற்றி எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. 14.04.2008ம் தேதிய அடமான தொகையை 1ம் பிரதிவாதி பொதுக்குடும்ப கர்த்தா மேனேஜராக, பொதுக்குடும்ப நன்மை மற்றும் வாதிகளின் நலன்களுக்காகவும் சேர்த்துதான் வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு இடையே ஏற்பட்ட 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்கது என்றாலும், அது என்னையும் கட்டுப்படுத்தும் என்றாலும், அந்த ஒப்பந்தத்தை கேள்வி கேட்க எனக்கு எந்த வித உரிமையும், தகுதியும் கிடையாது என்றாலும் சரியல்ல. முதலில் அக்ரிமெண்ட் போட்டது நான்தான். இடத்தின்

மதிப்பு அதிகமானதும் வேறு அக்ரிமெண்ட் போட்டுவிட்டார்கள். முதலில் எனக்கு இந்த இடம் வேண்டாம் என்றுதான் கூறினேன், என்னை ஏமாற்றிதான் கிரைய ஒப்பந்தம் போட்டார்கள். விலை அதிகம் ஆனவுடன் வேறு அக்ரிமெண்ட் போட்டுவிட்டார்கள். 3ம் பிரதிவாதிக்கு அ.வ.எண்.172-2008 வழக்கில் 3ம் பிரதிவாதி அசல் வழக்கில் கோரியபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 1 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தம் கூட்டுச் சதியில் உருவான மோசடி ஆவணம் என்றாலும், அதன்படி 3ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் கிடையாது என்று நான் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.172-2008 வழக்கு வஞ்சக கூட்டின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்று நான் வேண்டுமென்றே வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.85-2008 ல் நான் கோரியபடி எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றாலும், அது தள்ளுபடிக்குரியது என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**